**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**
**TIRUNELVELI**
UG COURESES – AFILIATED COLLEGES
**B.A. Tamil**
(Choice Based Credit System)
**(**with effect from the academic year 2017-2018)

| em (1) | Pt. I/II/ III/ IV/V (2) | Sub No (3) | Subject Status (4) | Subject Title (5) | Con-tact Hrs/ Week (6) | L Hrs./we ek (7) | T Hrs./w eek (8) | P Hrs./ Week (9) | C Cre- Dits (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| I | I | 1 | Language | Tamil/Other Language | 6 | 4 | 2 | 0 | 4 |
| | II | 2 | Language | English | 6 | 4 | 2 | 0 | 4 |
| | III | 3 | Core-i | இக்கால இலக்கியங்கள் | 6 | 4 | 2 | 0 | 4 |
| | III | 4 | Core-ii | இலக்கணம்: நன்னூல் - எழுத்ததிகாரம் | 6 | 5 | 1 | 0 | 4 |
| | IV | 5 | Allied-I | நாட்டுப்புறவியல் - I | 4 | 3 | 1 | 0 | 3 |
| | | 6 | Common | Environmental studies | 2 | 2 | 0 | 0 | 2 |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | **Subtotal** | 30 | 22 | 8 | 0 | 21 |
| II | I | 7 | Language | Tamil/Other Language | 6 | 4 | 2 | 0 | 4 |
| | II | 8 | Languagae | English | 6 | 4 | 2 | 0 | 4 |
| | III | 9 | Core III | சிற்றிலக்கியங்கள் | 6 | 4 | 2 | 0 | 4 |
| | III | 10 | Core IV | இலக்கணம்: நன்னூல் - சொல்லதிகாரம் | 6 | 5 | 1 | 0 | 4 |
| | IV | 11 | Allied-II | நாட்டுப்புறவியல் - II | 4 | 3 | 1 | 0 | 3 |
| | | 12 | Common | Value Based Education/ சமூக ஒழுக்கங்களும் பண்பாட்டு விழுமியங்களும்/Social Harmony | 2 | 2 | 0 | 0 | 2 |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | **Subtotal** | 30 | 22 | 8 | 0 | 21 |
| | | | | | | | | | |

# இளங்கலை - தமிழ் - பாடத்திட்டம்

## முதலாமாண்டு
## முதற்பருவம்
## இக்கால இலக்கியங்கள்

**அலகு-1** **12மணி நேரம் (11L+1T)**

கவிதைகள்: மரபுக்கவிதைகள்

பாரதியார் - பாஞ்சாலி சபதம்: சபதச் சருக்கம் - திரௌபதி கண்ணனுக்குச் செய்யும் பிரார்த்தனை, வீமன் செய்த சபதம், அர்ஜுனன் செய்த சபதம், பாஞ்சாலி செய்த சபதம்.

பாரதிதாசன்: தமிழியக்கம் – வரிப்புலியே, தமிழ் காக்க எழுந்திரு!

முடியரசன்: ஆறு

புதுக்கவிதைகள்

பிரமிள்: இந்தச் சொற்களுள் ஏதோ ஒன்று
பசுவய்யா: மந்திரம்
மீரா: கடவுளைத்தேடி
வாலி: என் அம்மாவிற்கு எழுதிய பிறந்தநாள் வாழ்த்து
அப்துல் ரகுமான்: கண்ணீரின் ரகசியம்
கலாப்பிரியா: வளர்ச்சி
தாமரை: பேசுகிறேன் பேசுகிறேன்

ஹைக்கூ கவிதைகள்

**அலகு-2** **12மணி நேரம்**

உரைநடை: கம்பன் கண்ட ஆட்சியில் - அரசியல், சமூகம்
குன்றக்குடி அடிகளார்
மங்கை வெளியீடு
B – 6, திரிவேணி அடுக்கம்
ஆழ்வார்பேட்டை, சென்னை - 18

**அலகு-3** **12மணி நேரம்**

சிறுகதைகள்: புதுமைப்பித்தன் சிறுகதைகள்
சீதைப் பதிப்பகம்
4-A/186, வெங்கட்ராம் பிள்ளைத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 5

**அலகு-4** **12மணி நேரம்**

நாவல்: கபாடபுரம் - நா.பார்த்தசாரதி
சீதைப் பதிப்பகம்
4-A/186, வெங்கட்ராம் பிள்ளைத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 5

**அலகு-5** **12மணி நேரம் (11L+1T)**

நாடகம்: தொடரும் ஒத்திகை
அ. ராமசாமி
நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்
சென்னை - 98

## மரபுக்கவிதைகள்

**பாரதியார் - பாஞ்சாலி சபதம்:**

சபதச் சருக்கம் - திரௌபதி கண்ணனுக்குச் செய்யும் பிரார்த்தனை, வீமன் செய்த சபதம், அர்ஜுனன் செய்த சபதம், பாஞ்சாலி செய்த சபதம

**பாரதிதாசன் - தமிழியக்கம் – வரிப்புலியே, தமிழ் காக்க எழுந்திரு!**

ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின்
முன்னேற்றம் ஒவ்வொன்றும்
உன்முன் னேற்றம்!

கண்டறிவாய்! எழுந்திரு நீ!
இளந்தமிழா, கண்விழிப்பாய்!
இறந்தொ ழிந்த

பண்டைநலம் புதுப்புலமை
பழம்பெருமை அனைத்தையும் நீ
படைப்பாய்! இந்நாள்

தொண்டுசெய்வாய்! தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
துடித்தெ ழுந்தே!

உயர்தமிழ்த்தாய் இந்நிலத்தில்
அடைகின்ற வெற்றியெலாம்
உன்றன் வெற்றி!

அயராதே! எழுந்திருநீ!
இளந்தமிழா, அறஞ்செய்வாய்!
நாம டைந்த

துயரத்தைப் பழி தன்னை
வாழ்வினிலோர் தாழ்மையினைத்
துடைப்பாய் இந்நாள்

செயல்செய்வாய் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
சிறி வந்தே.

வாழியநீ! தமிழ்த்தாய்க்கும்
வரும் பெருமை உன் பெருமை!
வயிற்றுக் கூற்றக்

கூழின்றி வாடுகின்றார்;
எழுந்திருநீ! இளந்தமிழா
குறைத விர்க்க

ஆழிநிகர் படைசேர்ப்பாய்!
பொருள்சேர்ப்பாய்! இன்பத்தை
ஆக்கு விப்பாய்!

ஊழியஞ்செய் தமிழக்குத்
துறைதோறும் துறைதோறும்
உணர்ச்சி கொண்டே,

உணர்ந்திடுக தமிழ்த்தாய்க்கு
வருந்தீமை உனக்குவரும்
தீமை அன்றோ!

பிணிநீக்க எழுந்திருநீ
இளந்தமிழா, வரிப்புலியே,
பிற்றை நாளுக்

கணிசெய்யும் இலக்கியம் செய்!
அறத்தைச் செய்! விடுதலைகொள்
அழகு நாட்டில்!

பணிசெய்வாய்! தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
பழநாட்டானே,

எதுசெய்ய நாட்டுக்கே
எனத்துடித்த சிங்கமே!
இன்றே, இன்னே,

புதுநாளை உண்டாக்கித்
தமிழ்காப்பாய் புத்துணர்வைக்
கொணர்வாய் இங்கே

அதிர்ந்தெழுக! தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
அழகு காப்பாய்!

இதுதான் நீ செய்தக்க
எப்பணிக்கும் முதற்பணியாம்
எழுக நன்றே.

## ஆறு

பகல்முழுதும் வெயில்காய்ந்து மேற்பாற் சேரும்
பகலவனை வழியனுப்பிக் கீழ்ப்பால் திங்கள்
முகமெழுப்பும் வேளை தனில் மகிழ்வு கூட்ட
முரணில்லா யாழெடுத்தாள் காதல் நல்லாள்;
முகம்சுழித்தேன்; 'ஏனென்றாள்?'; 'கவிதை யாக்க
முயல்கின்றேன் நீபாட முனைதல் நன்றோ?
தகவிதுவோ?' எனவுரைத்தேன்; யாழை வைத்தாள்
'தளிர்க்காத்தாய்! என்னுடன்வா' என்ற ழைத்தேன்

அவளுடன்நான் கற்பனையில் மிதந்து சென்றேன்
‘அத்தான்! ஓர் ஐயமுண்டு செய்யுள் யாக்கக்
கவலைதரும் இலக்கணமேன் வேண்டும்?’ என்றாள்;
‘காரிகையே! ஆற்றுக்குக் கரையேன் வேண்டும்?
சுவர்போலும் கரையிலையேல் ஆற்றின் தன்மை
ஏன்னாகும் சொல்லிடுக! ஊர்பாழ் அன்றோ?
ஆவமின்றி மொழிவிளங்கக் கவிதை என்னும்
ஆற்றுக்கும் இலக்கணமோர் கரையே யாகும்

பாவலன்தன் கவிப்பொருளைப் பாடுங் காலைப்
பாட்டகத்தே இலக்கணமும அமைதல் வேண்டும்
ஆவல்கொண்டு கவிபுனைவோர் இலக்க ணத்தை
அருகில்வைத்துப் பெருங்கவியாய் எண்ணிக்கொண்டு
தாவுகின்றார் பாடுவதற்குத் தவறி வீழ்ந்து
தகுபுலவோர் இலக்கணத்தைப் புதைத்து விட்டுக்
கூவுகின்றார் ஒப்பாரிக் குரலெ டுத்து;
கொடுமையிது! கவிஞன் தன் மரபும் அன்று!’

‘பண்டிதர்வே றென்னசொல்வார்? தமிழை எங்கும்
புரவவிட மனமில்லார்’ எனந கைத்தான்;
‘அண்டவந்த பிறமொழியால் தமிழை நீங்கள்
ஆயர்த்தடிமை ஏற்றிருந்த போது காத்துக்
கொண்டிருந்த பண்டிதனைக் குறைசொல் கின்றாய்?
குறைமதியைத் தலைக்கொண்டாய்! கவிஞ னும்யார்?
புண்டிதன்தான், உளறாதே! மோழியாம் ஆற்றில்
படிந்தெழுந்தால் உன்மடமை கரைந்து போகும்;

சிறுஇதயத் தூற்றெடுத்து மேனி எங்கும்
செழிப்பதற்குக் கிளைத்தோடும் குருதி யைப்போல்
குறுகிடத்தே தோற்றிப்பின் நாட்டில் செல்வம்
கொழிப்பதற்குக கிளைத்தோடும் ஆறு வெற்பில்
விறுவிறுப்ப அருவியெனப் பாறை மீது
வீழஅது கல்லாகி ஓட ஓடக்

குறுமணலாய் ஒன்றுதிரிந் தொன்றாம் என்ற
குவலயத்தின் பரினாம உண்மை காட்டும்;

மேற்றிசையில் செந்நிறத்தைக் கதிரோன் பாய்ச்சும்
வேளையிலே அவ்வொனியை ஆறு தன்மேல்
ஏற்றுளது மெய்வண்ணம் காட்டி, ஒவ்வோர்
இடங்களிலே நெளிந்தோடி இடையைக் காட்டி,
நாற்றுநிறை வயல்களுக்குப் பிரிந்து சென்று
நாள்வருவாய்க் கால்காட்டி, ஓடை மீது
காற்றுரசச் சலசலவென் றோடுங் காலை
களிநடஞ்செய் காற்சதங்கை ஒலியைக் காட்டி

கரையோரம் அலைக்கையால் வாரி விட்ட
கருமணலால் சுருள்கூந்தல் காட்டி, வெள்ளை
நுரைசேரும் புனல்தள்ளும் சங்கி னத்தின்
நுண்சினையால் பல்காட்டி, ஓடி ஓடி
இரைதேடும் கயல்மீனால் கண்கள் காட்டி,
இறுமாந்து செல்லுங்கால் தன்பால் செந்தா
முரையின்றி முகங்காட்ட முடியா ஆறு
மாய்வதற்குக் கடல்நோக்கி ஓடு தல்பார்!

ஊர்மக்கள் வெறுத்தொதுக்கும் கழிநீர் எல்லாம்
ஓடிவந்து கலந்தாலும் மாசு நீங்கி
ஊர்விட்டு நீங்குகையில் தூய்மை யாகி
ஊர்ந்துசெலும் ஆறுகண்டு தமிழைக் காணபாய்!
சார்பற்றுத் தனித்தியங்க வல்ல என் றன்
தமிழ்மொழியில் பிறமொழிகள் கலந்த போதும்
நேர்வுற்று மாசின்றி இயங்கும் பண்பை
நினைப்பூட்டும் ஆற்றுக்கு வாழ்த்துக் கூறு!

- **முடியரசன்**

## புதுக்கவிதைகள்

இந்தச் சொற்களுள் ஏதோ ஒன்று

சேற்றில் விழுந்த சொற்கள்
தானியமாயின.
புற்தரை மீது பூக்களாயின.
சருகுகளாகி
தெருவிலலைந்தன பல.
மாளிகையோ
குடிசையோ
என்றெனக்குத் தெரியாத
ஒரு பூமித்தளத்திலே
குழந்தைகளாயின.
மழலைகளாகி
இதயத்தில் பொழிந்தன.
மலிந்தன.
புழுதிகளாயின.
புயல்களுக்கு துவஜங்களாகி
கண்ணைக் கெடுத்து
காதைக் குடைந்தன.
புயல் ஒடுங்க மண்டின.
வேறு வேலையற்றுத் தவித்தன.
தவிக்காமல்
காற்றுக்கும் எட்டாமல்
கண்ணைக் கெடுக்காமல்
காதைக் குடையாமல்

களம் இழந்து
குரல் துறந்து
கருணை கொண்ட
ஏதோ ஒன்று மட்டும்
தானியமாயிற்று

இதயத்தில் வேரூன்றி
மன மழலைப் புழுதித் தூளில்
மழைத் துளிகளாய்த் திரண்டது.
மேல் நோக்கிப் பொழிந்தது.
வானோடு இலைகோர்த்து
பார்வை கண்டது.
கனிந்து
உயர விடிந்தது.

- பிரமிள்

## மந்த்ரம்

ட்யூப்லைட் சுந்தராச்சி உபயம்
குத்துவிளக்கு கோமுட்டிச்செட்டி உபயம்
உண்டியல்பெட்டி தெ.கு.வே. உபயம்
பஞ்சதிரி விளக்கு ஆண்டி நாடார் உபயம்
குண்டுச்சட்டி பால்பாயச உருளி த்ரிவிக்ரமன்
நாயர் உபயம்
சூடன்தட்டு ரீஜென்று மகாராணி உபயம்
தகரடப்பா ஆறு நித்யானந்தா உபயம்
அலுமினியப் போணி வமு.சல.பெ.ம.
அரிகரபுத்திரன் செட்டியார் உபயம்
ஸ்க்ரு ஆணி நட்டு பட்டு அம்மாள் உபயம்
தீபத்தட்டு பெரியன் தாத்தாச்சாரி உபயம்
சின்னத்தட்டு ஒரு டஜன்
வைரங்குளம் மிட்டாதார் உபயம்

வைரங்குளம் மிட்டாதார்
அவர் அப்பா உபயம்
அவர் அப்பா
அவர் அப்பா உபயம்
அவர் அப்பா
அவர் அம்மா உபயம்
அவர் அம்மா
அவர் அப்பா உபயம்
அவர் அப்பா
அவர் அம்மா
அவர் அம்மா
அவர் அப்பா
நீ
நான்
அவள்
இவன்
அவன்
பூனை
புண்
பூ
புழு
பூச்சி
குண்டூசி
குத்தூசி
கடப்பாரை
லொட்டு லொடக்கு
எல்லாம்
ஸ்வாமி
உபயம்
ஸ்வாமி

சிற்பி
உபயம்
சிற்பி
அவர் அப்பா உபயம்
அவர் அப்பா
அவர் அப்பா உபயம்
அவர் அப்பா
அவர் அம்மா உபயம்
அவர் அப்பா அவர் அம்மா
அவர் அம்மா அவர் அப்பா
எல்லாரும் ஸ்வாமி உபயம்
ஸ்வாமி
நம்ம உபயம்
நாம

ஸ்வாமி உபயம்
நம்ம பேரு சாமிமேலே
சாமி பேரு நம்மமேலே.

- பசுவய்யா

## கடவுளைத் தேடி

இருக்கிறார் கடவுள்
இல்லை கடவுள்?
வாதம் பிறந்தது:
மோதல் வளர்ந்தது

இப்போது,
இல்லை ஒருவர் இங்கே
இருக்கிறார் ஒருவர்
தலைமறை வாக!

போத்தனூர்க் காவலர்
புலனாய் கின்றார்.

- மீரா

.

**என் அம்மாவிற்கு எழுதிய பிறந்த நாள் வாழ்த்து**

எத்தனை சொந்தம் என் வாழ்வில்
வந்தாலும் அம்மா
உன் ஒற்றை பார்வையின் பந்தம்
எதுவும் தந்ததில்லை

உன் கண்ணீரை எல்லாம் சிரிப்பில்
மறைத்தாய் அம்மா
இத்தனைநாளும் அது எனக்கு
விளங்கியதில்லை

நான் வளரும் ஒவ்வொரு நொடியும்
உனக்கு பாரம் தான்
தெரிந்தும் சுமக்கிறாய்
பத்து மாதம் வரை அல்ல
உன் ஆயுள் காலம் வரை

உன் காலம் நரைக்கும் நேரத்தில்
என் நேரம் உனக்காய்

இருக்க போவதில்லை
தெரிந்தும்
காக்கிறாய் உன்
இமைக்குள் வைத்து என்னை
கடமைக்காக அல்ல
கடனுக்காக அல்ல
கடவுளாக

உன் வாழ்வின் ஒரு பாதி
உன் வாழ்வின் ஒரு பாதி
உன் பெற்றோருக்காய்
மறு பாதி உன் பிள்ளைகளுக்காய்
மனதார பகிர்ந்தளித்து விட்டாய்
என்றாவது உனக்காய் வாழும்
உத்தேசம் உண்டா

உன் அன்னைக்கு என்ன கைமாறு
செய்தாலும் உன்னை எனக்கு
தந்ததிற்கு ஈடாய்
ஒன்றும் செய்ய இல்லாமல்
முடமாய் நிற்கிறேன்

ஏழு ஜென்மங்களில் நம்பிக்கை இல்லை

இனி ஒரு ஜென்மம்
இருந்து உயிரினமாய் பிறந்தால்
உன்னை எந்தன் மகளாக்கும் பாக்கியம்
மட்டும் போதும்

ஒரே ஒரு வேண்டுகோள் உன்னிடம்
இன்று மட்டுமாவது
உனக்காய் வாழ முயற்சி செய்

என் இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

- வாலி

---

**கண்ணீரின் ரகசியம்**

‘இறைவா எனக்குப்
புன்னகைகளைக் கொடு’ என்று
பிரார்த்தித்தேன்

அவன் கண்ணீரைத் தந்தான்

‘வரம் கேட்டேன்
சாபம் கொடுத்து விட்டாயே’
என்றேன்

இறைவன் கூறினான்:
‘மழை வெண்டாம்
விளைச்சலை மட்டும் கொடு’ என்று
எந்த உழவனாவது கேட்பானா’

ஆனால் நீ
அப்படித்தான் கேட்கிறாய்

கண்ணிரில் புன்னகையும்
புன்னகையில் கண்ணீரும்
ஒளிந்திருப்பதை
நீ அறிய மாட்டாய்

உண்மையைச் சொல்வதானால்
கண்ணீர் கண்களின் புன்னகை
புன்னகை இதழ்களின் கண்ணீர்’

வைகறைப் பொழுதில் மலர்களின் மீது
பனித்துளிகளை
நீ கண்டதில்லையா?

புன்னகை
தன்னைக் கண்ணீரால்
அலங்கரித்துக் கொள்ளும்
அற்புதம் அல்லவா அது!

மழை மேகங்களில்
மின்னல் உதிப்பதை
நீ பார்த்ததில்லையா?

கண்ணீரில் இருந்து
சிரிப்புப் பிறக்கும்
அழகல்லவா அது?

முத்து என்பது என்ன?
சிப்பிக்குள் இருந்து
தவம் செய்யும் கண்ணீர்த் துளி
புன்னகையாகும் அதிசயம் தானே அது

கன்ணீரில் மலரும்
புன்னகைப் பூக்கள்
வாடுவதில்லை என்பதை
அறிவாயாக!

மேலும்
கண்ணீர்தான்
உன்னைக் காட்டுகிறது

புன்னகையோ
சில நேரங்களில்
உனக்கு திரையாகிவிடுகிறது

- அப்துல் ரகுமான்

**வளர்ச்சி**

எங்கள் வீடுகளையொட்டி
ஒரு வாய்க்கால்
ஒரு காலத்தில்
அதன் நீர்
எல்லோருக்கும்
பலவழிகளில்
பயன் பட்டது
நாங்கள் குழந்தைகள்
வாழை மட்டையில்
தெப்பம் செய்து
தெரிந்தவரை

அலங்கரித்து கயிறு கட்டி
படித்துறையில் இருந்தபடி
எட்டும் மட்டும் மிதக்கவிடுவோம் பின்
இழுத்துக் கொள்வோம்.
மறுபடி செல்ல அனுமதிப்போம்
மறுபடி.....மறுபடி
தெப்பம் கொஞ்சங் கொஞ்சமாய் சிதைந்து
மட்டைகளாகி நீரோடு போகும்
மனமில்லாமல்
விளையாட்டைப் பிரிவோம்.
**** **** ****
இப்போது கெட்டுப் போய்
இழுப்பற்றுத் தேங்கிய நீரில்
குப்புற மிதக்கும்
என்புதோல்ப் பிணமொன்று
வீட்டருகே
ஒதுங்கி நிற்பதாய்ச் சொல்ல
கழியெடுத்துப் போய்
தள்ளி விட்டோம்
எங்கள் எல்லையைத் தாண்டி
எங்கள் எல்லைக்குள் நின்று
தயாராய் இருந்தார்
அடுத்தடுத்த வீடுகளிலும்
அவரவர் கழிகளோடு.

- கலாப்ரியா'.

**பேசுகிறேன் பேசுகிறேன்**

பேசுகிறேன் பேசுகிறேன் உன் இதயம் பேசுகிறேன்
புயலடித்தால் கலங்காதே நான் பூக்கள் நீட்டுகிறேன்
எதை நீ தொலைத்தாலும் மனதை தொலைக்காதே

அடங்காமலே அலை பாய்வதேன்
மனம் அல்லவா.........

பேசுகிறேன் பேசுகிறேன் உன் இதயம் பேசுகிறேன்
புயலடித்தால் கலங்காதே நான் பூக்கள் நீட்டுகிறேன்

கடல் தாண்டும் பறவைக்கெல்லாம்
இளைப்பார மரங்கள் இல்லை
கலங்காமலே கண்டம் தாண்டுமே
ஓஹோஹோஹோ......

முற்றுப்புள்ளி அருகில் நீயும்
மீண்டும் சின்ன புள்ளிகள் வைத்தால்
முடிவென்பதும் ஆரம்பமே

வளைவில்லாமல் மலை கிடையாது
வலி இல்லாமல் மனம் கிடையாது
வருந்தாதே வா

அடங்காமலே,அலை பாய்வதேன்
மனம் அல்லவா.........

காட்டில் உள்ள செடிகளுக்கெல்லாம்
தண்ணீர் ஊற்ற ஆளே இல்லை
தன்னை காக்கவே தானாய் வளருமே..
ஓஹோஹோஹோ

பெண்கள் நெஞ்சின் பாரம் எல்லாம்
பெண்ணே கொஞ்சம் நேரம் தானே
உன்னை தோண்டினால் இன்பம்
தோன்றுமே

விடியாமல் தான் ஒரு இரவேது
வடியாமல்தான் வெள்ளம் குறையாது
வருந்தாதே வா

அடங்காமலே அலை பாய்வதேன்
மனம் அல்லவா...

- தாமரை

---

ஹைக்கூகவிதைகள்

**மரமும் நிழலும்**

வெட்டினான் மரம்
செத்து விட்டதே
நிழல்!

- வேலாயுதம்

**பூக்கள்**

பூக்கள்!
யார் எழுதிய
பாக்கள்?

- வேலாயுதம்

**எதிரிநண்பன்**

எதிரியே உன்னை எடுத்துக்காட்டும்
சிறந்த நண்பன்!
ஏனென்றால் உன் பலம், பலவீனம்
அறிந்தவன் அவன் மட்டுமே!

**-செய்யது முகம்மது ஜலானி**

பிம்பங்களற்ற தனிமையில்
ஒன்றிலொன்று
முகம் பார்த்தன
சலூன் கண்ணாடிகள்

**- நா.முத்துக்குமார்**

சோளக்கொல்லை பொம்மைக்கும்
உடையுண்டு
எங்களுக்கு!

**- சீனு. தமிழ்மணி**

# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

## இளங்கலை – தமிழ் - பாடத்திட்டம்

## முதலாமாண்டு
## முதற்பருவம்
## இலக்கணம் - நன்னூல் - எழுத்ததிகாரம்

(பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் நீங்கலாக)

**நோக்கம்:** தமிழ் இலக்கிய மாணவர்கள் எழுத்திலக்கண அறிவுபெறுதல் எழுத்து பிறக்கும் முறைகளை, இடங்களை உணர்தல், எழுத்துகளை வகைப்படுத்துதல் பகுபதம், பகாபதம் அறிதல், நிலைமொழி – வருமொழிப் புணர்ச்சி, உருபுப்புணர்ச்சி முதலான எழுத்துகளின் இலக்கண அறிவு பெறுதல்.

**அலகு-1** **12மணி நேரம் (11L+1T)**

எழுத்தியல்: எண் - பெயர் – முறை – பிறப்பு – உருவம் - மாத்திரை - முதனிலை - இறுதிநிலை - இடைநிலையாக்கம் - போலி.

**அலகு-2** **12மணி நேரம்**

பதவியல்: பகுபதம் - பகாபதம் - பகுதி - இடைநிலை -விகுதி – வடமொழியாக்கம்

**அலகு-3** **11மணி நேரம்**

உயிரீற்றுப்புணரியல்: பொதுப்புணர்ச்சி – உயிரீற்றுப் புணர்ச்சி - ஊகார ஏகார – ஐகார ஈற்றுச் சிறப்பு விதிகள்

**அலகு-4** **14மணி நேரம்**

மெய்யீற்றுப்புணரியல்: மெய்யீற்றின்முன் உயிர் – மெய்முன் உயிர் – ணகர, னகரஈறு – மகரஈறு – யகர, ரகர, ழகர ஈறுகள் - லகர ளகர ஈறு – வருமொழி ரகர, நகரத்திரிபு.

**அலகு-5** **11மணி நேரம்**

**உருபுப்புணரியல்**: எட்டு உருபுகள் சாரும் இடவகை – வேற்றுமை உருபுகள் - நிலைமொழி வருமொழியோடு உருபுகள் புணர்தல் - பொதுச் சாரியைகள் - உருபுப்புணர்ச்சிக்குச் சிறப்புவிதி.

**பாடநூல் - நன்னூல் - எழுத்ததிகாரம்**
**-கழக வெளியீடு**

# முதலாமாண்டு
# முதற்பருவம்
# துணைமைப் பாடம்
# நாட்டுப்புறவியல் - I

**நோக்கம்** : நாட்டுப்புறவியலைப் பற்றி அறியச் செய்தல்.

**பயன்:** மக்களின் வாழ்க்கை முறைகளையும், பண்பாட்டையும் நாட்டுப்புற இலக்கியங்கள் வழி அறிந்து கொள்ளுதல் நாட்டார் இலக்கியங்களைத் தொகுக்கவும், அவற்றைப் பாதுகாக்கவும் ஆர்வத்தை ஏற்படுத்துதல்.

**அலகு:1** **10மணி நேரம்**

நாட்டுப்புறவியல் விளக்கம் - வகைப்பாடு - நாட்டுப்புற இயலும் பிற இயலும் - நாட்டுப்புற இயல் கோட்பாடுகள் - வரலாற்றுப் புவியியல் கோட்பாடு, வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு, அமைப்பியல் கோட்பாடு, உளவியல் கோட்பாடு

**அலகு:2** **5மணி நேரம் (4L+1T)**

நாட்டுப்புறப்பாடல்கள் -வகைப்பாடு: தாலாட்டுப்பாடல்கள், குழந்தைப்பாடல்கள், காதற்பாடல்கள், தொழிற்பாடல்கள், கொண்டாட்டப் பாடல்கள், ஒப்பாரிப்பாடல்கள்

**அலகு:3** **10மணி நேரம்**

நாட்டுப்புறக்கதைகள் -வகைப்பாடு: நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் - தமிழக கதைப்பாடலின் தோற்றமும் வளர்ச்சியும் - மரபும் தன்மையும் - கதைப்பாடல் - கதைப்பாடலின் மூலம் அறியும் செய்திகள்.

**அலகு:4** **10மணி நேரம்**

பழமொழிகள்- வகைப்பாடு -பழமொழியின் தன்மை – அமைப்பு கருப்பொருள். நடையியல் ஆய்வு – பழமொழியும் தமிழ் இலக்கியங்களும்

விடுகதைகள் விளக்கம் - வகைகள், சூழல், கருப்பொருள், நடையியல் ஆய்வு – பழமொழிக்கும் விடுகதைக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள்.

**அலகு:5** **10மணி நேரம்**

புராணக் கதைகள் - விளக்கம் - புராணக்கதை ஆய்வு தமிழ்ப்புராணக்கதை வகைகள்.

**பாடநூல்**

நாட்டுப்புற இயல் ஆய்வு
டாக்டர் சு. சக்திவேல்
மணிவாசகர் பதிப்பகம்
8/7 சிங்கர் தெரு, பாரிமுனை
சென்னை – 600 108

**பார்வை நூற்கள்**

1. நாட்டுப்புற இயல்
டாக்டர் ஆறு. இராமநாதன்
மணிவாசகர் பதிப்பகம்.

2. நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள்
டாக்டர். தே.லூர்து.
நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்
தூய சவேரியார்(தன்னாட்சி) கல்லூரி
பாளையங்கோட்டை – 627 002

**குறிப்பு:**

சரியான விடையைத் தேர்வு செய்யும் வினா பாட நூலிலிருந்து மட்டும் கேட்கப்பட வேண்டும்.

## முதலாமாண்டு
## இரண்டாம் பருவம்
## முதன்மைப் பாடம்
## சிற்றிலக்கியங்கள்

அலகு-1 **12மணி நேரம் (11L+1T)**

தமிழ்விடுதூது முழுமையும்

அலகு-2 **12மணி நேரம்**

1. அபிராமி அந்தாதி (1-20)
2. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் (முத்தப்பருவம்) 10 பாடலகள்

அலகு-3 **12மணி நேரம்**

1. கலிங்கத்துப்பரணி – காளிக்குக் கூளி கூறியது-(312-362) 50 பாடல்கள்
2. விக்கிரம சோழனுலா - மன்னன் பெருமை 1 முதல் 180 வரிகள்

அலகு-4 **12மணி நேரம்**

1. முக்கூடற்பள்ளு – பள்ளியர் வரவு, தெய்வநிலைப் போற்றல் (5 -33)
2. குற்றாலக் குறவஞ்சி – மலைவளம், நாட்டுவளம்

அலகு-5 **12மணி நேரம் (11L+1T)**

1. முத்தொள்ளாயிரம் - சேரன் பாடல்கள் (2 – 26)
2. நந்திக் கலம்பகம் - 22 பாடல் (வீரம்,கொடை,பெருமை குறித்தப்பாடல்கள் - 5,7,12,14,15,16,17,21,23,26,27,31,37,38,49,61,68,82,86)

முதலாமாண்டு
இரண்டாம் பருவம்
துணைமைப் பாடம்
நாட்டுப்புறவியல் **II**

நோக்கம்:

நாட்டுப்புற மக்களின் கலைகளை அறிதல். நாட்டுப்புற மக்களின் வாழ்வியலில் நம்பிக்கைகளையும், பொழுதுபோக்கு நிகழ்வுகளையும் அறிந்து கொள்ளுதல்.
பயன்: அழிந்துவரும் கலைகளையும், மருத்துவத்தையும் காக்க முற்படுதல்.

அலகு: 1 **10மணி நேரம்**

நாட்டுப்புறக் கலைகளும் கைவினைப் பொருட்களும். நாட்டுப்புறக் கலைகளின் வகைப்பாடு – நிகழ்த்து கலைகள் - நிகழ்த்தா கலைகள் - கட்டடக்கலை- கூத்து வகைகள், கைவினைப் பொருட்கள் - மண்பாண்டக்கலை பிற கைவினைத் தயாரிப்புகள்

அலகு: 2 **4மணி நேரம்**

நாட்டுப்புற நம்பிக்கைகள்- பண்டைத் தமிழரின் நம்பிக்கைகளும் சகுனங்களும்-நம்பிக்கைகளின் வகைகள் - நம்பிக்கை பற்றிய ஆய்வுகன்-

அலகு: 3 **10மணி நேரம்**

நாட்டுப்புறத் தெய்வங்கள் - வழிபாட்டுமுறைகள் - சிறுதெய்வ, பெருந்தெயவ வழிபாடு- நாட்டுப்புறத ்தெய்வ கோவில்களின் அமைப்பு – நாட்டுப்புறத் திருவிழாக்கள் - வருடாந்திர விழாக்கள் - கோவில் விழாக்களும் சந்தைகளும்.

அலகு: 4 **11மணி நேரம்(11L+1T)**

நாட்டுப்புற விளையாட்டுகள் - விளையாட்டு பற்றிய கொள்கைகள் - விளையாட்டுப் பாகுபாடு – சிறுவர் விளையாட்டுகள் - ஆடவர் விளையாட்டுகள் - மகளிர் விளையாட்டுகள்.

அலகு- 5 **10மணி நேரம்**

நாட்டுப்புற மருத்துவம் - மந்திர சமய மருத்துவம் - இயற்கை மருத்துவம்- கிறித்தவ மீனவர் நாட்டுப்புற மருத்துவம் - காணிக்கார பழங்குடிகள் நாட்டுப்புற மருத்துவம் - நாட்டுப்புற மருத்துவ நம்பிக்கைகள் - நாட்டுப்புற மருத்துவமும் பழமொழிகளும்.

பாடநூல்:

நாட்டுப்புற இயல் ஆய்வு
டாக்டா சு. சக்திவேல்
மணிவாசகர் பதிப்பகம்,
8/7 சிங்கர் தெரு, பாரிமுனை
சென்னை – 600108

பார்வை நூற்கள்

1. நாட்டுப்புற இயல்
டாக்டர் ஆறு. இராமநாதன்
மணிவாசகர் பதிப்பகம்

2. நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள்

டாக்டர். தே.லூர்து

நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்,

தூய சவேரியார் (தன்னாட்சி) கல்லூரி, பாளையங்கோட்டை - 627002.

**குறிப்பு**

சரியான விடையைத் தேர்வுசெய்யும் வினாக்கள் பாடநூலிலிருந்து மட்டும் கேட்கப்பட வேண்டும்.